செ.வெ.எண்.216 நாள்.15.05.2017

**பத்திரிக்கை செய்தி**

காஞ்சிபுரம் மாவட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் தேசிய குழந்தை தொழிலாளர் திட்டமானது மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 28 சிறப்பு பயிற்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களில் குழந்தை தொழிலாளராக இருந்து மீட்கப்பட்ட 879 குழந்தைகள் கல்வி பயின்று வருகின்றனர். இவர்கள் வயதிற்கேற்ற கல்வி வழங்கப்பட்டு முறைசார் பள்ளியில் சேர்க்கப்படுவர். இவ்வாறு முறைசார் பள்ளியில் சேர்க்கப்பட்டு, இக்கல்வியாண்டில் பனிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் 7 மாணவர்கள் மற்றும் 8 மாணவியர்கள் ஆக மொத்தம் 15 பேர் பனிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதியதில் 14 பேர் தேர்ச்சி அடைந்தனர். ஒக்கியம்துரைப்பாக்கம் பகுதியைச் சேர்ந்த எம்.சி.என். நகர் சிறப்பு பயிற்சி மையத்தில் படித்து 1200 மதிப்பெண்களுக்கு 1127 மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்ற ப. வம்சிகிருஷ்ணா மாவட்ட ஆட்சித் தலைவரை சந்தித்து வாழ்த்து பெற்றார். அப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தமது வாழ்த்துகள் மற்றும் பாராட்டுகளை தெரிவித்ததோடு, மேற்கொண்டு உயர் கல்வியைத் தொடரவும், இதே போன்று பல சாதனைகள் புரியவும் வாழ்த்தினார்.

இந்நிகழ்வியின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.க.சௌரிராஜன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்கு) திரு.செல்வம் ஆகியோர் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்